14 JUN 2017

2

20313

## சுருக்கம்

வேளாண்மைத்துறை – வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் – விழுப்புரம் விற்பனைக்குழுவின் கீழ் உளுந்தூர்பேட்டை வட்டத்தில் உள்ள திருநாவலூர் கிராமத்தில் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கான அங்காடிப் பகுதிகள் – 1987–ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப் பிரிவு 9 (1)(a) மற்றும் 6(2)–ன்படி அறிவிக்கைகள் வெளியிடப்படுகிறது.

---

## வேளாண்மைத் (வேவி2) துறை

அரசாணை (நிலை) எண்.141

நாள்: 09.06.2017
திருவள்ளுவர் ஆண்டு 2048
வைகாசித் திங்கள் 26ம் நாள்
படிக்கப்பட்டவை:–

1) அரசாணை (நிலை) எண்.167, வேளாண்மை (வேவி2) துறை, நாள் 15.04.1997.
2) அரசாணை (நிலை) எண்.197, வேளாண்மை (வேவி2) துறை, நாள் 9.12.2014.
3) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கடித எண்.விகுதி 2/21292/14, நாள் 13.02.2015, 22.06.2016, 18.08.2016 மற்றும் 22.02.2017.

**ஆணை:–**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 21.04.1997–ஆம் நாள் முதல் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திற்கு விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் அங்காடிக்குழுவும், தென்னாற்காடு வள்ளலார் மாவட்டத்திற்கு தென்னாற்காடு வள்ளலார் அங்காடிக்குழுவும் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பின்னர் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் அங்காடிக்குழு, ‘விழுப்புரம் அங்காடிக்குழு’ என்றும், தென்னாற்காடு வள்ளலார் அங்காடிக்குழு, கடலூர் அங்காடிக்குழு என்றும் அழைக்கப்பட்டு வருகின்றன. விழுப்புரம் விற்பனைக்குழுவின் கீழ் திண்டிவனம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், சின்னசேலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, தியாகதுருகம், திருவெண்ணெய்நல்லூர், சங்கராபுரம், மணலூர்பேட்டை, அவலூர்பேட்டை, மரக்காணம், விக்கிரவாண்டி, அனந்தபுரம், வளத்தி மற்றும் மூங்கில்துறைப்பட்டு ஆகிய 17 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் செய்யப்பட்ட அறிவிப்பின்படி, 1987–ம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப் பிரிவு 6(1)–ன் கீழ் நெல், முழு அல்லது உடைக்கப்பட்ட வேர்கடலை (தோலுடன் கூடியது மற்றும் தோல் நீக்கிய பருப்புகள்), நல்லெண்ணெய் விதை அல்லது பேய் எள் அல்லது எள், பருத்தி (கப்பாஸ், லிண்ட், கழிவு), எல்லா வடிவங்களிலுமுள்ள உளுந்து, எல்லா வடிவங்களிலுமுள்ள பச்சைப்பயறு,

(த.பி.பா.)

அனைத்துவகை முந்திரி பருப்புகள், அனைத்துவகை கரும்பு வெல்லம் (வெல்லப்பொடி, பழுப்பு சர்க்கரை, இதரவகைகள்), கொத்தமல்லி விதைகள் (Dhania Seeds), எல்லா வடிவங்களிலுமுள்ள கம்பு (Bajra), எல்லா வடிவங்களிலுமுள்ள ராகி, அனைத்து வகை மஞ்சள் (விரலி மஞ்சள்), எல்லா வடிவங்களிலுமுள்ள காராமணி, வரகு, வேப்ப விதைகள் மற்றும் பருத்தி விதை முதலான விளைபொருட்களின் விற்பனையை முறைப்படுத்துவதற்குரிய வசதிகள் ஏற்படுத்துவற்கு விழுப்புரம் விற்பனைக் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் உளுந்தூர்பேட்டை வட்டத்தில் உள்ள திருநாவலூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினை தோற்றுவிக்க பணித்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி அரசாணையில், 1987-ம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் சட்டப்பிரிவு 6 (2)-ன்படி திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் விற்பனை பகுதிகளை அறிவிக்கை செய்ய ஏதுவாக கருத்துரு அனுப்புமாறு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளை நிர்ணயம் செய்து அறிவிக்கை செய்திடும் பொருட்டு, உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியாக உள்ள 16 கிராமங்கள் மற்றும் திருவெண்ணெய்நல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியாக உள்ள 58 கிராமங்கள் ஆகியவற்றை 1987-ம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 9-ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (1) (a) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், கடலூர் மாவட்டத்திற்குட்பட்ட பண்ருட்டி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியிலிருந்து 3 கிராமங்களை 1987-ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 9-ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (1) (a) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டு திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட அங்காடி பகுதியில் சேர்த்தும் மற்றும் விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், ஒடப்பங்குப்பம் கிராமம் இதுவரை அறிவிக்கையிடப்பட்ட பகுதியில் அறிவிக்கை செய்யப்படாத காரணத்தினால், அதனை 1987-ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 6-வது பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு 2-இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டு சேர்த்தும் அறிவிக்கை செய்து ஆணை வழங்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

4. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் கிராமத்தில் புதியதாக தோற்றுவிக்க பணிக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளை நிர்ணயம் செய்ய, உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளில் 16 கிராமங்கள் மற்றும் திருவெண்ணெய்நல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளில் 58 கிராமங்கள் அடங்கிய பகுதிகளை 1987-ம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 9-ம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (1) (a) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு நீக்கி, அவ்வாறு நீக்கப்பட்ட பகுதிகளை திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அங்காடிப் பகுதிகளாக சேர்க்கவும், கடலூர் விற்பனைக்குழுவிற்குட்பட்ட, பண்ருட்டி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியிலிருந்து 3 கிராமங்கள் அடங்கிய பகுதிகளை 1987-ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்)

(த.பி.பா.)

சட்டத்தின் 9–ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (1) (a) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டு நீக்கி அவ்வாறு நீக்கப்பட்ட பகுதிகளை திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அங்காடிப் பகுதிகளாக சேர்க்கவும், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்தில் உள்ள ஒடப்பங்குப்பம் என்ற கிராமம் இதுவரை எந்த ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் கீழும் அறிவிக்கையிடப்படாத காரணத்தினால், அதனை 1987–ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 6–ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு 2–ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு சேர்க்கவும், 17 வகையான விளைபொருட்களுக்கு மொத்தம் 78 கிராமங்களை திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அங்காடிப் பகுதிகளாக மேற்சொன்ன சட்டத்தின் சட்டப் பிரிவு 6(2)–இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் இவ்வாணையின் இணைப்புகளில் கண்டவாறு அறிவிக்கை செய்து ஆணையிடுகிறது. இவ்வரசாணையின் இணைப்பிலுள்ள அறிவிக்கை ஆங்கிலத்திலும், தமிழிலும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும். அவ்வாறு தமிழ்நாடு அரசிதழில் வெளியான ஒரு மாத காலத்திற்குள் விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்ட அரசிதழ்களிலும் வெளியிடப்படும்.

5. அரசு மத்திய அச்சக பணி மேலாளர், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட இவ்வறிவிக்கையின் நான்கு நகல்களை, செய்தி மற்றும் மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை 600 009–க்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார். செய்தி மற்றும் மக்கள் தொடர்பு இயக்குநர், இவ்வறிவிக்கையினை தமிழ்நாடு அரசிதழில் வெளியான ஒரு மாத காலத்திற்குள், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் அதிகப் புழக்கத்தில் உள்ள இரு தமிழ் நாளேடுகளில் பிரசுரம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார். விழுப்புரம் மற்றும் கடலூர் விற்பனைக்குழு செயலாளர்கள், இவ்வறிவிக்கை விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் இரு தமிழ் நாளேடுகளில் பிரசுரிக்கப்படுவதை உறுதி செய்துகொள்ளுமாறும், அவ்வாறு அறிவிக்கை வெளியான இரு தமிழ் நாளேடுகளின் நகல்களை அரசுக்கு அனுப்பிவைக்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். செய்தி மற்றும் மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை–600 009 அவர்கள் இவ்வறிவிக்கை இரு தமிழ் நாளேடுகளில் வெளியிடுவதற்காகும் செலவினச் சீட்டை விழுப்புரம் மற்றும் கடலூர் விற்பனைக்குழுக்களின் செயலாளர்களுக்கு நேரடியாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. அரசு மத்திய அச்சக பணி மேலாளர், சென்னை 600 079 மற்றும் உதவி பணி மேலாளர், அரசினர் கிளை அச்சகம், விருத்தாசலம் ஆகியோர் முறையே அறிவிக்கை வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசிதழ், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்ட அரசிதழ்களின் இரு நகல்களை அரசுக்கு (வேளாண்மை (வேவி2) துறைக்கு) அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

( ஆளுநரின் ஆணைப்படி )

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பணி மேலாளர், அரசு மத்திய அச்சகம், சென்னை– 600 079.
உதவி பணி மேலாளர், அரசினர் கிளை அச்சகம், விருத்தாசலம்.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9. (4 நகல்கள்)
வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை–32 (6 நகல்கள்)

(த.பி.பா.)

தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம், சென்னை–32.

செயலாளர், விழுப்புரம் மற்றும் கடலூர் விற்பனைக்குழு (வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர், சென்னை – 32 மூலமாக).

மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் / கடலூர்.

முதன்மை மாநில கணக்காயர் (E&RSA), சென்னை–18.

முதன்மை மாநில கணக்காயர் (G&SSA),சென்னை–18.

இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சென்னை–108.

இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் (பொது மற்றும் சமூகப் பிரிவு தணிக்கை) அலுவலகம், தலைமைச்செயலகம், சென்னை –9.

**நகல் :–**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.

சட்டத்துறை/ பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை/ நிதித்துறை, சென்னை–9.

வேளாண்மை (வேவி1/வேவி3) துறை, சென்னை–9.

வேளாண்மை(அநமு3)துறை,சென்னை–9 (அட்டவணைப்படுத்தும் வகைக்கு)

இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## அறிவிக்கை –I

1987–ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 9–ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (1) (a) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், 09.06.2017அந்நாள் முதற்கொண்டு கீழேயுள்ள அட்டவணையில் கலம் 2–இல் குறிப்பிட்டுள்ள பகுதிகளைக் கலம் 3–இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளிலிருந்து நீக்கியும், அவ்வாறு நீக்கப்பட்ட பகுதிகளை திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளாக சேர்த்தும் இதன் மூலம் அறிவிக்கிறார்.

### அட்டவணை

| வரிசை. எண் | பகுதிகளின் பெயர் | எந்த அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதியிலிருந்து நீக்கப்படுகிறது. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | ஆண்டிக்குழி | உளுந்தூர்பேட்டை |
| 2. | விஜயங்குப்பம் | உளுந்தூர்பேட்டை |
| 3. | ஆரிநத்தம் | உளுந்தூர்பேட்டை |
| 4. | கூட்டடி | உளுந்தூர்பேட்டை |
| 5. | எலவத்தடி | உளுந்தூர்பேட்டை |
| 6. | மட்டிகை | உளுந்தூர்பேட்டை |
| 7. | வாணாம்பட்டு | உளுந்தூர்பேட்டை |
| 8. | கல்லமேடு | உளுந்தூர்பேட்டை |
| 9. | பு.மாம்பாக்கம் | உளுந்தூர்பேட்டை |
| 10. | செங்குறிச்சி | உளுந்தூர்பேட்டை |
| 11. | கூ.கள்ளக்குறிச்சி | உளுந்தூர்பேட்டை |
| 12. | சேந்தநாடு | உளுந்தூர்பேட்டை |
| 13. | மதியனூர் | உளுந்தூர்பேட்டை |
| 14. | இலுப்பையூர் | உளுந்தூர்பேட்டை |
| 15. | வடமாம்பாக்கம் | உளுந்தூர்பேட்டை |
| 16. | கிளியூர் | உளுந்தூர்பேட்டை |
| 17. | பெரியப்பட்டு | திருவெண்ணைய் நல்லூர் |
| 18. | ஈஸ்வரகண்டநல்லூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 19. | சிறுளப்பட்டு | திருவெண்ணைய் நல்லூர் |
| 20. | பரவனந்தல் | திருவெண்ணைய் நல்லூர் |
| 21. | தேவியானந்தல் | திருவெண்ணைய் நல்லூர் |
| 22. | சோமாசிப்பாளையம் | திருவெண்ணைய் நல்லூர் |

| | | |
|---|---|---|
| 23. | சிறுபுலியூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 24. | மணலூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 25. | உடையானந்தல் | திருவெண்ணைய் நல்லூர் |
| 26. | செம்மணந்தல் | திருவெண்ணைய் நல்லூர் |
| 27. | செஞ்சிகுப்பம் | திருவெண்ணைய் நல்லூர் |
| 28. | ஆவலம் | திருவெண்ணைய் நல்லூர் |
| 29. | மேட்டத்தூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 30. | பரிக்கல் | திருவெண்ணைய் நல்லூர் |
| 31. | எடையாளம் | திருவெண்ணைய் நல்லூர் |
| 32. | பெரும்பாக்கம் | திருவெண்ணைய் நல்லூர் |
| 33. | சேந்தமங்கலம் | திருவெண்ணைய் நல்லூர் |
| 34. | வண்டிப்பாளையம் | திருவெண்ணைய் நல்லூர் |
| 35. | களத்தூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 36. | இருந்தை | திருவெண்ணைய் நல்லூர் |
| 37. | கூவாகம் | திருவெண்ணைய் நல்லூர் |
| 38. | கொரட்டூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 39. | சிறுத்தனூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 40. | மடப்பட்டு | திருவெண்ணைய் நல்லூர் |
| 41. | டி.ஒரத்தூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 42. | பா.கிள்ளனூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 43. | பெரும்பட்டு | திருவெண்ணைய் நல்லூர் |
| 44. | பாதூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 45. | களமருதூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 46. | ஆத்தூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 47. | ஆதனூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 48. | ம.குண்ணத்தூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 49. | பூவனூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 50. | தாமல் | திருவெண்ணைய் நல்லூர் |
| 51. | புத்தநந்தல் | திருவெண்ணைய் நல்லூர் |
| 52. | சீக்கம்பட்டு | திருவெண்ணைய் நல்லூர் |
| 53. | நன்னாரம் | திருவெண்ணைய் நல்லூர் |
| 54. | திருநரங்கொன்றை | திருவெண்ணைய் நல்லூர் |
| 55. | வேலூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 56. | ரகுநாதபுரம் | திருவெண்ணைய் நல்லூர் |

| | | |
|---|---|---|
| 57. | கொண்டசமுத்திரம் | திருவெண்ணைய் நல்லூர் |
| 58. | ஆனத்தூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 59. | பொய்யரசூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 60. | டி.குமாரமங்கலம் | திருவெண்ணைய் நல்லூர் |
| 61. | காரப்பட்டு | திருவெண்ணைய் நல்லூர் |
| 62. | மேல்தணியாலம்பட்டு | திருவெண்ணைய் நல்லூர் |
| 63. | சேமங்கலம் | திருவெண்ணைய் நல்லூர் |
| 64. | கீழ்தணியாலம்பட்டு | திருவெண்ணைய் நல்லூர் |
| 65. | அரசூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 66. | திருமுண்டிச்சரம் (கிராமம்) | திருவெண்ணைய் நல்லூர் |
| 67. | ஆலங்குப்பம் | திருவெண்ணைய் நல்லூர் |
| 68. | இருவேல்பட்டு | திருவெண்ணைய் நல்லூர் |
| 69. | பேரங்கியூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 70. | காந்தலவாடி | திருவெண்ணைய் நல்லூர் |
| 71. | பருகம்பட்டு | திருவெண்ணைய் நல்லூர் |
| 72. | கரடிப்பாக்கம் | திருவெண்ணைய் நல்லூர் |
| 73. | சித்தானங்கூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 74. | மாமந்தூர் | திருவெண்ணைய் நல்லூர் |
| 75. | திருநாவலூர் | பண்ருட்டி |
| 76. | கிழக்கு மருதூர் | பண்ருட்டி |
| 77. | சிவாப்பட்டினம் | பண்ருட்டி |

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## அறிவிக்கை –II

1987–ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிபச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 6–ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (2)–இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள அட்டவணையில் கலம் (1)–ல் கண்டுள்ள விழுப்புரம் விற்பனைக் குழுவிற்குட்பட்ட திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் பரப்பினையும் மற்றும் கலம் (2)–ல் குறிப்பிடப்பட்டுள்ள திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தினைச் சுற்றியுள்ள பகுதிகளையும் அனைத்து வகையான அறிவிக்கையிடப்பட்ட வேளாண் விளை பொருட்களைப் பொருத்தமட்டில் மேற்சொன்ன சட்டத்தின் நோக்கங்களுக்காக திருநாவலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளாக இதனால் அறிவிக்கிறார்:–

### அட்டவணை

| திருநாவலூர் விற்பனை பகுதி | ஒழுங்குமுறை விற்பனை கூடத்தினை சுற்றியுள்ள பகுதிகள் |
|---|---|
| (1) | (2) |
| | ஆண்டிக்குழி |
| | விஜயங்குப்பம் |
| | ஆரிநத்தம் |
| | கூட்டடி |
| | எலவத்தடி |
| | மட்டிகை |
| | வாணாம்பட்டு |
| | கல்லமேடு |
| | பு.மாம்பாக்கம் |
| | செங்குறிச்சி |
| | கூ.கள்ளக்குறிச்சி |
| | சேந்தநாடு |
| | மதியனூர் |
| | இலுப்பையூர் |
| | வடமாம்பாக்கம் |
| | கிளியூர் |
| | பெரியப்பட்டு |
| | ஈஸ்வரகண்டநல்லூர் |
| | சிறுளப்பட்டு |
| | பரவனந்தல் |

| | |
|---|---|
| | தேவியானந்தல் |
| | சோமாசிப்பாளையம் |
| | சிறுபுலியூர் |
| | மணலூர் |
| | உடையானந்தல் |
| | செம்மணந்தல் |
| | செஞ்சிகுப்பம் |
| | ஆவலம் |
| | மேட்டத்தூர் |
| | பரிக்கல் |
| | எடையாளம் |
| | பெரும்பாக்கம் |
| | சேந்தமங்கலம் |
| | வண்டிப்பாளையம் |
| | களத்தூர் |
| | இருந்தை |
| | கூவாகம் |
| | கொரட்டூர் |
| | சிறுத்தனூர் |
| | மடப்பட்டு |
| | டி.ஒரத்தூர் |
| | பா.கிள்ளனூர் |
| | பெரும்பட்டு |
| | பாதூர் |
| | களமருதூர் |
| | ஆத்தூர் |
| | ஆதனூர் |
| | ம.குண்ணத்தூர் |
| | பூவனூர் |
| | தாமல் |
| | புத்தநந்தல் |
| | சீக்கம்பட்டு |
| | நன்னாரம் |
| | திருநரங்கொன்றை |
| | வேலூர் |
| | ரகுநாதபுரம் |

| | |
|---|---|
| | கொண்டசமுத்திரம் |
| | ஆனத்தூர் |
| | பொய்யரசூர் |
| | டி.குமாரமங்கலம் |
| | காரப்பட்டு |
| | மேல்தணியாலம்பட்டு |
| | சேமங்கலம் |
| | கீழ்தணியாலம்பட்டு |
| | அரசூர் |
| | திருமுண்டிச்சரம் (கிராமம்) |
| | ஆலங்குப்பம் |
| | இருவேல்பட்டு |
| | பேரங்கியூர் |
| | காந்தலவாடி |
| | பருகம்பட்டு |
| | கரடிப்பாக்கம் |
| | சித்தானங்கூர் |
| | மாமந்தூர் |
| | திருநாவலூர் |
| | கிழக்கு மருதூர் |
| | சிவாப்பட்டினம் |
| | ஒடப்பங்குப்பம் |

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

NOTIFICATION-I.

In exercise of the powers conferred by clause (a) of sub-section (1) of section 9 of the Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act, 1987 (Tamil Nadu Act 27 of 1989), the Governor of Tamil Nadu hereby excludes the areas specified in column (2) from the notified market areas specified in column (3) of the Table below, so as to include the said areas into the proposed notified market area of Thirunavalur with effect on and from the 09th day of June, 2017.

**THE TABLE**

| Serial No. | Name of the areas | Excluded from the notified market areas |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | Andikuzhi | Ulundurpet |
| 2. | Vijayangkuppam | Ulundurpet |
| 3. | Arinatham | Ulundurpet |
| 4. | Kuttadi | Ulundurpet |
| 5. | Elevanthadi | Ulundurpet |
| 6. | Mattigai | Ulundurpet |
| 7. | Vanampattu | Ulundurpet |
| 8. | Kallamedu | Ulundurpet |
| 9. | Pu. Mampakkam | Ulundurpet |
| 10. | Sengurichi | Ulundurpet |
| 11. | Ku. Kallakurichi | Ulundurpet |
| 12. | Senthanadu | Ulundurpet |
| 13. | Madhiyanur | Ulundurpet |
| 14. | Iluppaiyur | Ulundurpet |
| 15. | Vadamampakkam | Ulundurpet |
| 16. | Kiliyur | Ulundurpet |
| 17. | Periyapattu | Thiruvennainallur |
| 18. | Eswarakandanallur | Thiruvennainallur |
| 19. | Sirulapattu | Thiruvennainallur |
| 20. | Paravananthal | Thiruvennainallur |
| 21. | Deviyananthal | Thiruvennainallur |
| 22. | Somasipalayam | Thiruvennainallur |
| 23. | Sirupuliyur | Thiruvennainallur |
| 24. | Manalur | Thiruvennainallur |
| 25. | Udaiyananthal | Thiruvennainallur |
| 26. | Semmananthal | Thiruvennainallur |
| 27. | Senjikuppam | Thiruvennainallur |
| 28. | Avalam | Thiruvennainallur |
| 29. | Mettatthur | Thiruvennainallur |

| | | |
|---|---|---|
| 30. | Parikkal | Thiruvennainallur |
| 31. | Edaiyalam | Thiruvennainallur |
| 32. | Perumbakkam | Thiruvennainallur |
| 33. | Sendamangalam | Thiruvennainallur |
| 34. | Vandipalayam | Thiruvennainallur |
| 35. | Kalathur | Thiruvennainallur |
| 36. | Irunthai | Thiruvennainallur |
| 37. | Koovagam | Thiruvennainallur |
| 38. | Korattur | Thiruvennainallur |
| 39. | Siruthanur | Thiruvennainallur |
| 40. | Madapattu | Thiruvennainallur |
| 41. | T.Orathur | Thiruvennainallur |
| 42. | Pa. Killanur | Thiruvennainallur |
| 43. | Perumpattu | Thiruvennainallur |
| 44. | Pathur | Thiruvennainallur |
| 45. | Kalamaruthur | Thiruvennainallur |
| 46. | Attur | Thiruvennainallur |
| 47. | Athanur | Thiruvennainallur |
| 48. | M. Kunnathur | Thiruvennainallur |
| 49. | Poovanur | Thiruvennainallur |
| 50. | Damal | Thiruvennainallur |
| 51. | Butthananthal | Thiruvennainallur |
| 52. | Seekampattu | Thiruvennainallur |
| 53. | Naannaram | Thiruvennainallur |
| 54. | Thirunarankonrai | Thiruvennainallur |
| 55. | Velur | Thiruvennainallur |
| 56. | Raghunathapuram | Thiruvennainallur |
| 57. | Kondasamuthiram | Thiruvennainallur |
| 58. | Anathur | Thiruvennainallur |
| 59. | Poyyarasur | Thiruvennainallur |
| 60. | T. Kumaramangalam | Thiruvennainallur |
| 61. | Karapattu | Thiruvennainallur |
| 62. | Melthaniyalampattu | Thiruvennainallur |
| 63. | Semangalam | Thiruvennainallur |
| 64. | Keelthaniyalampattu | Thiruvennainallur |
| 65. | Arasur | Thiruvennainallur |
| 66. | Thirumundicharam (Gramam) | Thiruvennainallur |
| 67. | Alanguppam | Thiruvennainallur |
| 68. | Iruvelpattu | Thiruvennainallur |
| 69. | Perangiyur | Thiruvennainallur |
| 70. | Kandhalavadi | Thiruvennainallur |
| 71. | Padugampattu | Thiruvennainallur |
| 72. | Karadipakkam | Thiruvennainallur |

| | | |
|---|---|---|
| 73. | Sitthaanangoor | Thiruvennainallur |
| 74. | Mammandur | Thiruvennainallur |
| 75. | Thirunavallur | Panruti |
| 76. | Killaku Maruthur | Panruti |
| 77. | Sivapattinam | Panruti |

Gagandeep Singh Bedi
Agricultural Production Commissioner and
Principal Secretary to Government

//True Copy//

13/6/17
Section Officer

NOTIFICATION-II.

In exercise of the powers conferred by sub-section (2) of section 6 of the Tamil Nadu Agricultural Produce Marketing (Regulation) Act, 1987 (Tamil Nadu Act 27 of 1989), the Governor of Tamil Nadu hereby declares the areas of Thirunavalur Regulated Market under the Villupuram Market Committee specified in column(1) of the Table below and the areas around the Thirunavalur Regulated Market comprising of the areas specified in the corresponding entries in column(2) thereof, to be the notified market area of Thirunavalur Regulated Market for the purposes of the said Act, in respect of all notified Agricultural produces:-

**THE TABLE**

| Thirunavalur Market Area | Areas around the Thirunavalur Market comprised of the following areas |
|---|---|
| (1) | (2) |
| | Andikuzhi |
| | Vijayangkuppam |
| | Arinatham |
| | Kuttadi |
| | Elevanthadi |
| | Mattigai |
| | Vanampattu |
| | Kallamedu |
| | Pu. Mampakkam |
| | Sengurichi |
| | Ku. Kallakurichi |
| | Senthanadu |
| | Madhiyanur |
| | Iluppaiyur |
| | Vadamampakkam |
| | Kiliyur |
| | Periyapattu |
| | Eswarakandanallur |
| | Sirulapattu |
| | Paravananthal |
| | Deviyananthal |
| | Somasipalayam |
| | Sirupuliyur |
| | Manalur |

| | |
|---|---|
| | Udaiyananthal |
| | Semmananthal |
| | Senjikuppam |
| | Avalam |
| | Mettatthur |
| | Parikkal |
| | Edaiyalam |
| | Perumbakkam |
| | Sendamangalam |
| | Vandipalayam |
| | Kalathur |
| | Irunthai |
| | Koovagam |
| | Korattur |
| | Siruthanur |
| | Madapattu |
| | T.Orathur |
| | Pa. Killanur |
| | Perumpattu |
| | Pathur |
| | Kalamaruthur |
| | Attur |
| | Athanur |
| | M. Kunnathur |
| | Poovanur |
| | Damal |
| | Butthananthal |
| | Seekampattu |
| | Naannaram |
| | Thirunarankonrai |
| | Velur |
| | Raghunathapuram |
| | Kondasamuthiram |
| | Anathur |
| | Poyyarasur |
| | T. Kumaramangalam |
| | Karapattu |
| | Melthaniyalampattu |
| | Semamangalam |
| | Keelthaniyalampattu |
| | Arasur |
| | Thirumundicharam (Gramam) |
| | Alanguppam |

| | |
|---|---|
| | Iruvelpattu |
| | Perangiyur |
| | Kandhalavadi |
| | Padugampattu |
| | Karadipakkam |
| | Sitthaanangoor |
| | Mammandur |
| | Thirunavallur |
| | Kilaku Marudur |
| | Sivapattinam |
| | Odappankuppam |

Gagandeep Singh Bedi
Agricultural Production Commissioner and
Principal Secretary to Government

//True Copy//

Section Officer